Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 19

வெள்ளிக்கிழமை
15 டிசெம்பர் 2023

கார்த்திகை 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054




# காற்றுச் சுழற்சியால் வடக்குக்குப் பாதிப்பு

## கனமழை 18வரை தொடரும்: குளிரான காலநிலையும் நீடிக்கும்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 15

இலங்கைக்கு தென்கிழக்கே வங்காள விரிகுடாவில் தோற்றம்பெற்றுள்ள காற்றுச் சுழற்சியின் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்துவருகின்ற கனமழையானது எதிர்வரும் 18ஆம் திகதி வரை தொடர்வதற்கான வாய்ப்புகள் உண்டு - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

11

## மக்களே அவதானம்!!!

கிளிநொச்சி, டிசெ. 15

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் சிறிய அளவில் திறப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதால், குளத்தின் கீழ்ப் பகுதியில் இருக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவு எச்சரித்துள்ளது.

11

## மூழ்கியது மாங்குளம்

### ஏ-9 வீதியிலும் போக்குவரத்துப் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக மாங்குளம் நகரம் நேற்று வெள்ளத்தில் மூழ்கியது. ஏ -9 பிரதான வீதியின் ஊடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுக்காலையிலிருந்து தொடர்ச்சியாக மழை பெய்து வருவதன் காரணமாக, ஏ-9 பிரதான வீதியில் மாங்குளம் நகரப் பகுதிக்கு அண்மையாக இரு இடங்களில் வீதியை மேவி வெள்ளம் பாய்வதால்

11

## டெங்கின் தாக்கம் யாழிலேயே உயர்வு

### முப்படைகளின் ஒத்துழைப்புடன் கட்டுப்பாட்டு நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனரென, மாகாணத்தின் டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டத்தின்போது தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் க.கனகேஸ்வரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

11

## பிரிட்டன் இளவரசி இலங்கைக்குப் பயணம்



கொழும்பு, டிசெ. 15

பிரிட்டன் இளவரசி அன்னே இலங்கைக்கு வருகைதரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வருகை தரவுள்ள அவர், 13ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாதது

கொழும்பு, டிசெ. 15

வற்வரி அதிகரிப்பால் நுகர்வுப் பொருள்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என நுகர்வோர் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

11

## மாணவியைத் தாக்கிய ஆசிரியர் கைது

வவுனியா, டிசெ. 15

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவியை, ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் வைத்து தாக்கிய சம்பவம் தொடர்பிலும், மாணவி தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முற்பட்டமை தொடர்பிலும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்

11

## இடைநடுவில் நிற்கும் 200 திட்டங்கள் மீள ஆரம்பம்



கொழும்பு, டிசெ. 15

வெளிநாட்டு உதவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட 200 க்கும் மேற்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் மீள ஆரம்பிக்கப் படுமென நிதி

11

## திடீரென வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

சைக்கிளில் பயணிக்கும் போது திடீரென கீழே வீழ்ந்தவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த வல்லி சின்னத்தம்பி (வயது - 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 11ஆம் திகதி சைக்கிளில் கடைக்குச்சென்றபோது திடீரென கீழே

11

## மஹிந்தவிடமும் இமயமலைப் பிரகடனம் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 15

உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் ஆகியோர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்து இமய மலைப் பிரகடனத்தை கையளித்துள்ளனர். (அ-ஒ-இ)

## கீரிமலை ஜனாதிபதி மாளிகை

# காணி சுவீகரிப்புக்கு அளவீடு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 15

நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்கான நில அளவீட்டு நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/226 மற்றும் ஜே/233 கிராம அலுவலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைக்குரிய காணிகளே இவ்வாறு அளவிடப்படவுள்ளன. (அ-ஓ-66)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.ம.ச. கூட்டணியில்

# சஜித் ஜனாதிபதி பீரிஸ் பிரதமர்



**கொழும்பு, டிசெ. 15**
**சஜித் தலைமையில் பரந்துபட்ட புதிய அரசியல் கூட்டணி அமைக்கப்படுவதற்கு பேச்சுகள் நடந்துவரும் நிலையில், இந்தக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தும், பிரதமராக பீரிஸும் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.**

எதிர்வரும் ஜனவரி மாதம் இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் எனத் தெரியவருகிறது.

உருவாக்கப்படும் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படவுள்ளார். குறித்த கூட்டணி வெற்றிபெற்ற பின்னர் உருவாக்கப்படும் அரசாங்கத்தில் ஜீ.எல்.பீரிஸை பிரதமராக நியமிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர ஜனதா சபையின் சில உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர்.

இதன் காரணமாக டலஸ் அழகப்பெரும அதிருப்தி அடைந்துள்ளதாகவும் சுதந்திர ஜனதா சபையிலிருந்து வெளியேறத் தயாராகி வருவதாகவும் அறிய முடிகிறது. (ம)

# கீழ்த்தரமான பட்ஜெட்

*சஜித் தரப்பு விளாசல்*

கொழும்பு, டிசெ. 15
சாதாரண மக்களைப் புறக்கணித்து பெரும் செல்வந்தர்களைப் போசிக்கும் வரவு - செலவுத் திட்டம் மூலம் சமூகத்தில் எந்தத் தரப்புக்கும் எந்த நன்மையும் கிட்டவில்லை. இதனை மிகவும் கீழ்த்தரமான வரவு - செலவுத் திட்டம் என்றே அழைக்கலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணயநிதியத்தின் மூலம் இன்னும் 8 தவணைகளைப் பெறவேண்டும். எனவே, இரண்டாம் தவணை கிடைத்தமைக்காக ஆரவாரப்பட்டுக் கொண்டாடக்கூடாது. ஊழலை எதிர்க்கும், ஊழலை இல்லாதொழிக்கும் மற்றும் நல்லாட்சிக்காகத் தயாராகும் எந்தவொரு நபருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்தே இருக்கும் - என்றார். (ம)

# பிரித் நூலைக் கழற்றி வீசியெறிந்த அநுர!

கொழும்பு, டிசெ.15
தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆசி வழங்கி, பிரித் நூலைக் கட்டி விட்டு, சிறப்பாக நாட்டை ஆட்சி செய்யுமாறு ஆலோசனை வழங்கினேன் என்று மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குணுவெவே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அவருக்கு ஆசி வழங்கி, பிரித் நூலைக் கட்டி ஆலோசனை வழங்கினேன். விகாரையில் இருந்து வெளியேறிய அனுரகுமார, நான் அவரது கையில் கட்டிய பிரித் நூலைக் கழற்றித் தரையில் வீசினார்.

அதைக் கண்ட எனது மாணவர்களான இளம் பிக்குகள்,எனது வாகனச் சாரதி ஆகியோர் சம்பவம் குறித்து என்னிடம் தெரிவித்தனர். அவர்கள் மாயவாதிகள்,அரசியல்வாதிகளுக்கு மதமோ, அறமோ கிடையாது அவர்களைக் கணக்கில் எடுக்கவேண்டாம் என நான் அவர்களிடம் கூறினேன் - என்றார். (எ-இ)



# குடும்ப வன்முறை ஆண்கள் பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 15
இலங்கையில் குடும்ப வன்முறை காரணமாக, 10 வீதமான ஆண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்ப வன்முறைகளை முறைப்பாடு செய்வதற்கு 'மிது பியச' பிரிவில் 24 மணி நேரமும் செயற்படக் கூடியதான தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது. 070 2611 111 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலமும் குடும்ப வன்முறை தொடர்பில் எந்த நேரத்திலும் தெரிவிக்கமுடியும் என பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# விக்கிரகங்களைத் தகர்த்து நகைகள் திருட்டு; பூசகர் மறியலில்!

யாழ்ப்பாணம், டிசெ.15
ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள ஆலயங்களின் விக்கிரகங்களைக் கிளப்பி, அதற்குக்கீழ் உள்ள பொற்காசுகள் மற்றும் நகைகள் என்பவற்றைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பூசகர் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பூசகரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிபதி சாலினி ஜெயபாலச்சந்திரன் முன்னிலையில் நேற்று முற்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். கொக்குவிலைச் சேர்ந்த, 27 வயதான மேற்படி சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றில் போதை தொடர்பான வழக்குகளும் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 15
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பிற்பகல் 4 மணிக்கு உருத்திராபிஷேகமும் சிறப்புப் பூசையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார் என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-17)

# பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 15
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன், செயலாளராக பரா.சாந்தகுமார், உபசெயலாளராக செ.ஹரின்ரன்றாஜ், பொருளாளராக எவ்.எக்ஸ்.மயூரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் பா.நந்தகுமார், கே.தேனிகா, செ.செல்வசுரேஷ், ஜே.சுதர்சன், கோ.கஜேந்திரன், பாமினி காண்டீபன், கெ.டியூட்டன்ராஜ், எஸ்.ஒளியரசி, இ.சங்கீதா, செ.தினேஸ்ராஜ், கி.வசிதரன், வே.விஜயலக்சி, சி.கோகிலவாணி ஆகியோரும் உறுப்பினர்களாகத் தெரிவாகினர். (ச-17)

# விமானப்படைக் கொண்டாட்டம் இம்முறை யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், டிசெ. 15



இலங்கை விமானப்படையின் 73ஆவது ஆண்டு விழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை விமானப்படையின் 73ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்குரிய திட்டங்கள், அதற்குத் தேவையான வளப்பகிர்வு, இலங்கை விமானப்படையால் ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள், இசை நிகழ்ச்சி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ம-20)

# இமயமலைப் பிரகடனம் எதுவும் தெரியாது எமக்கு

*கைவிரித்தது பௌத்தசாசன அமைச்சு*

கொழும்பு, டிசெ. 15
உலகத்தமிழர் பேரவையும் பௌத்த மதகுருமார்களும் இணைந்து தயாரித்துள்ள பன்முகத்தன்மையை வலியுறுத்தும் இமயமலைப் பிரகடனம் குறித்து எங்களுக்கு எதுவும் தெரியாது என பௌத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்தவாரம் பன்முகத்தன்மையை முன்னிலைப்படுத்தும் இமயமலைப் பிரகடனத்தை உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் பௌத்தமதகுருமாரும் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இந்நிலையில் இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட தரப்பினருடன் தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் சோமரட்ண விதானபத்திரன தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். கடன் உதவி இலங்கைக்குப் பேருதவி

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ.15**

**சர்வதேச நாணயநிதியத்தின் கடன் வசதி இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கான இரண்டாவது தவணைக் கடன் வசதியை சர்வதேச நாணயநிதியம் வழங்கியிருப்பது திருப்தியளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் இந்த நடவடிக்கை இலங்கைக்கு ஒரு முக்கியமான படியாகும். இது நாட்டின் முன்னேற்றத்துக்கு மட்டுமல்ல நிலையான சீர்திருத்தங்கள் மற்றும் மேம்பட்ட நிர்வாகத்துக்கான வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் இரண்டாம் தவணைக் கொடுப்பனவாக இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கவுள்ளது. (எ-இ)

# இலகு ரயில் திட்டம் மீளப் பேச்சு ஆரம்பம்

கொழும்பு, டிசெ.15



இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக ஜப்பான் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் பேச்சு நடத்துகின்றது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கையில் இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மீள் மதீப்பீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான பூர்வாங்கப் பணிகள் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி 91 மாதங்களில் முடிக்கப்பட இருந்தது. இருப்பினும், 21 மாதங்களுக்குப் பின்னர் திட்டத்தை இரத்துச் செய்ய அரசாங்கம் முடிவு செய்தது.

இலகு ரக ரயில் சேவை இரத்துச் செய்யப்பட்டதால், ஆலோசனைச் சேவைகளுக்காக நியமிக்கப்பட்ட நிறுவனம் கோரிய சேதங்களை ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்ய, அமைச்சரவை பேச்சுக் குழுவை நியமித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அனுமதி அட்டைகள் இணையத்தில்

கொழும்பு, டிசெ.15

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி தொடங்கி 31ஆம் திகதி வரை நடைபெறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளையும், நேர அட்டவணையையும் தற்போது இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# புதிய முதலீடுகள் ஈர்ப்பு கட்டுமானம் புத்தெழுச்சி

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

**இலங்கையின் வங்குரோத்து நிலை காரணமாக முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள விரும்பாத பல நிறுவனங்கள் விரைவில் மீண்டும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளன. அதனால் வீழ்ச்சியடைந்துள்ள கட்டுமானத்துறை எதிர்வரும் மாதங்களில் புத்தெழுச்சி பெறும் - இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

கடந்த ஒன்றரை வருடமாக நாட்டின் கட்டுமானத்துறை பெரும் பின்னடைவைக் கண்டிருந்தது.

தற்போது கைவிடப்பட்டிருந்த ஜப்பான் இலகு ரயில் சேவைத்திட்டம், இடைநிறுத்தப்பட்டிருந்த விமான நிலைய கட்டட வேலைத்திட்டம் முதலானவை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

சர்வதேச நாணயநிதியத்தின் கடன் உதவியும் கிடைக்கும் தருணத்தில் கட்டுமானத் தொழிலில் பெரும் முன்னேற்றம் கிட்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ-இ)

# 2025 ஆம் ஆண்டு சொத்து வரி!

கொழும்பு, டிசெ.15

2025ஆம் ஆண்டில் சொத்து வரி முறையை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கும் செயற்பாட்டில் ஒரு முக்கியமான அங்கமாக இருக்கும் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

அதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்கத் தயார் என சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான மிஷன் தலைவர் பீட்டர் ப்ரூவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# தினம் தெரியுமோ?

மழை கடுமையாக் கொட்டத் தொடங்கிட்டு. வெள்ளப்பெருக்கு வருமெண்டெல்லாம் வெருட்டுறாங்கள். ஆனால் வெள்ளம் வருகுதோ இல்லையோ அதுக்கு முதல் டெங்கு மட்டும் மளமளவெண்டு எல்லா இடமும் பரவத் தொடங்கிட்டுது. இலங்கையிலையே யாழ்ப்பாணத்தில தான் டெங்குக் காய்ச்சலில பாதிக்கப்பட்ட ஆக்கள் கூடவாம். வெள்ளம் வந்தபிறகு அணை கட்டுறமாதிரி, டெங்கு வந்தபிறகுதான் எங்கட ஆக்கள் விழுந்தடிச்சு வேலை செய்வினம். டெங்குக் கட்டுப்பாட்டு வாரம், விழிப்புணர்வு நடவடிக்கை, வீட்டுத் தரிசனம், எண்டு ஒவ்வொரு பேர் வைச்சு, டெங்கை அடியோட ஒழிக்கப்போறவை மாதிரி எக்கச்சக்கம் வேலைத்திட்டங்கள் நடந்தும் டெங்கு பரவுறதைத் தடுக்க முடியேலை, எங்க பாத்தாலும் 'காய்ச்சல், தடிமன், இருமல்' எண்டு சொல்லுற ஆக்கள்தான் கூட.

அதைவிட முந்தி ஒராளுக்கு டெங்கு வந்தால் அந்த ஏரியாவே அதகளப்படும். டெங்குக் காய்ச்சல் வந்த ஆளின்ர வீடு, காணி, பக்கத்து வீடுகள், வளவுகள் எண்டு எல்லா இடமும் சந்திரமண்டலத்துக்குப் போற உடுப்போட வந்து மருந்துப்புகை அடிப்பினம். அந்தப்புகையில அந்த ஏரியாவில பதுங்கி இருக்கிற டெங்கு நுளம்புகள் அழிஞ்சு போடும். அதால அக்கம் பக்கத்தில உள்ளவை தங்களை டெங்கு நுளம்பு கடிச்சுப் போடுமோ எண்டு பயப்பிடத்தேவையில்லை. ஆனால் இப்ப அந்த டெங்கு மருந்து நாட்டில ஒரு இடமும் இல்லையாம். அதால புகையடிக்கிறவையும் டெங்கு வந்தவையின்ர வீட்டுப்பக்கம் வாறேலை. இப்பிடி ஒவ்வொரு வருசமும் அவசியமாத் தேவைப்படுற மருந்தை வாங்கோணும் எண்ட அக்கறை அரசாங்கத்துக்கும் இல்லை, அதை ஆய்க்கினை பண்ணி வாங்க வைக்கவேணும் எண்ட எண்ணம் எங்கட சுகாதாரத்துறை ஆக்களுக்கும் இல்லை.

இப்பிடி இவையின்ர அலட்சியத்தாலதான் இப்ப யாழ்ப்பாணத்தில டெங்கு உரு வந்தது மாதிரி ஆடிக்கொண்டிருக்குது. இளநீர்க்கோம்பை, தண்ணி தேங்கிற ஓட்டை உடைசல்கள் எல்லாத்தையும் அழிச்சால் இனிமேல் அங்க நுளம்பு பெருகாமல் பாக்கலாம். ஆனால் இப்ப ஊரெல்லாம் உலாத்திக் கொண்டு திரியிற டெங்கு நுளம்பை புகை அடிச்சாத்தானே துலைக்க முடியும். அதுகளுக்கு ஆயுள் இருக்கிற வரைக்கும் கிடைக்கிற ஆக்களை குத்திக்கொண்டுதானே திரியப்போகுதுகள். எங்கட கெட்டகாலத்துக்கு அதிகளின்ர சாதகத்தில ஆயுள் கெட்டியா இருந்தால், இஞ்சத்தை சனத்தின்ர கதி என்னவாகிறது? ஆரும் மனம் வைச்சு, அந்தப் புகை மருந்தை வேளைக்கு வாங்கிற வழியைப் பாருங்கோவன்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்கள்

## போலி ஆவணத்தை தயாரித்தவர் கைது

கொழும்பு, டிசெ. 15

வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட போலி ஆவணங்களைத் தயாரித்த ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது அவர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட நபர் 61வயதுடையவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## சிசுவின் சடலம் வீதியில் மீட்பு!

கொழும்பு, டிசெ. 15

பிரதான வீதியொன்றிலிருந்து சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மஹியங்கனை - தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த வழியாகச் சென்ற ஒருவர் சடலத்தைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

## மகன் வெட்டிய மரம் வீழ்ந்து தந்தை பலி!

கொழும்பு, டிசெ. 15

மகன் வெட்டிக் கொண்டிருந்த மரத்தின் கிளை ஒன்று தந்தையின் தலைமீது விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை - திக்தலாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் மகன் வீட்டுக்கு அருகிலுள்ள பலாமரத்தை வெட்டிக் கொண்டிருந்தபோதே இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மொனராகலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## வெட்டுக்காயத்துடன் சடலமாக மூதாட்டி!

கொழும்பு, டிசெ. 15

வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் 71 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கஹவத்தை - வெள்ளந்துறை பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

குறித்த பெண் தனது மகளுடன் வீட்டில் தங்கியிருந்த நிலையில், மகள் வேலை முடிந்து வீடு திரும்பியபோது தாய் வெட்டுக்காயங்களுடன் உயிரிழந்தநிலையில் காணப்பட்டார் என்று முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கஹவத்தைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## கடலட்டை பிடித்த 7 பேர் கைதாகினர்

கொழும்பு, டிசெ. 15

சிலாவத்துறைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 7 பேர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட சுமார் 874 கடலட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டன. (ச-இ)

# வடக்கு- கிழக்கை பிரித்தமைக்கு மன்னிப்புக் கோருமா ஜே.வி.பி.?

ஐங்கரநேசன் கேள்வி



**கொழும்பு, டிசெ. 15**

**தங்கள் மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு - கிழக்கை நீதிமன்றப் படியேறிச் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜே.வி.பி. என்பதைத் தமிழினம் ஒருபோதும் மறவாது. ஜே.வி.பி. வடக்கு - கிழக்கைப் பிரித்தமைக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்பையுமல்லவா கோரவேண்டும். அவ்வாறு கோருமா? என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் மக்களைத் தங்களுடன் இணையக் கோருகின்ற ஜே.வி.பி. அவர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகவுமல்லவா தெரிவிக்கவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமா? தேவைகளை நிறைவேற்றுவோம் என்று கூறும் ஜே.வி.பி. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்காக தன்வசம் உள்ள தீர்வையுமல்லவா வெளிப்படுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு வெளிப்படுத்துமா? தமிழ் மக்களின் இந்தக் கேள்விகளுக்கான தெளிவான பதில்களை ஜே.வி.பி. வழங்காதவரை தமிழ்மக்களின் மனங்களை அதனால் ஒருபோதும் வெல்ல முடியாது - என்றுள்ளது. (ம-27)

## வயல்களில் வீசப்படும் கழிவால் பாதிக்கப்படும் நெற்பயிர்கள்!

சாவகச்சேரி, டிசெ. 15

வயல்களில் குப்பைகளைக் கொட்டுவதால், நெற்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக சாவகச்சேரி - கண்டுவில் குளத்தைச் சுற்றியுள்ள வயல்களில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வயல்களில் கழிவுப் பொருள்கள் வீசப்படுவதால் வயலுக்கு உரவகைகள் போடுவதற்கும் கிருமிநாசினி விசிறுவதற்கும் கூலியாள்கள் தயக்கம் காட்டுகின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம-9)



## வல்வெட்டித்துறையில் டெங்குக் கட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 15

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில், பருத்தித்துறை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை கடற்கரை உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளில் டெங்கு பெருகுவதற்கு ஏதுவாக இருந்த பிளாஸ்ரிக் கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டன. (ம-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும்பொறுமையைக்கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். எதிலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடவேண்டாம். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர் பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது சற்று கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக தேவை. வழிபாடு மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம். செலவுகள் ஏற்படும். தாயின் தேவையை நிறைவேற்ற சற்று அலைச்சல் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். கணவன் பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். ஆதாயம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணை யால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச்செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிச்சைப் பாத்திரம் ஏந்தி....


இலங்கை கடந்த ஆண்டு வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பொருளாதார மீட்சி பற்றி தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகின்றது. ஆனாலும் நாட்டில் எந்தவொரு மீட்சியும் ஏற்படவில்லை. பொருளாதார நெருக்கடிக்கான வங்குரோத்துக்கான காரணங்கள் எவையும் சரிசெய்யப்படவில்லை. நாடு அதல பாதாளத்திலிருந்தபோது எல்லோருக்கும் ஞானோதயம் வந்ததைப் போன்று வங்குரோத்துக்கான காரணங்கள் சரிசெய்யப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். காலம் செல்லச்செல்ல அந்த நிலைப்பாடு மெல்லமெல்லத் தளரத்தொடங்கிவிட்டது.

வெளிநாடுகளிடம் கண்மண் தெரியாமல் வாங்கிக் குவித்த கடனே, நாடு இந்தளவுதூரம் வங்குரோத்து நிலையை அடைவதற்குப் பிரதான காரணம். அதிலும் சீனாவிடம், எந்தவொரு உருப்படியான திட்டங்களும் இல்லாமல் வாங்கிக் குவித்த கடன் இந்த நிலையை இலங்கை அடைவதில் முன்னிலை பெறுகின்றது கடன் வாங்குவதில் தொடங்கி, அந்தக் கடனில் கட்டப்பட்ட கட்டுமானங்கள் வரையில் அரசியல்வாதிகள் முதல் அதிகாரிகள் வரை இலஞ்சம், தரகுப் பணம் என்று தங்கள் பைகளை நிரப்பிக்கொண்டார்கள். இப்போதும் அதிலிருந்து மீள வரமுடியாமல் இருக்கின்றார்கள்.

அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இரண்டு நாள்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்து இலங்கை ஒருபோதும் கடன் வாங்கும் கொள்கையில் இருந்து மாறப்போவதில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. சீனா, பிரான்ஸ், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு சலுகைகளை வழங்க முன்வந்திருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அந்த நாடுகள் இலங்கை வாங்கிய கடனை மறுசீரமைக்கத்தான் இணங்கியிருக்கின்றன. ஆனால், அந்தக் கடனை எப்படியாவது மீளக் கட்டி முடிக்கத்தான்வேண்டும். அந்தக் கடனை எப்படிக் கட்டுவது? இப்போது சர்வதேசநாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்தும் கடன் கிடைக்கின்றது. எல்லாப் பக்கமும் நாடு கடனை நோக்கியே நகர்கின்றது. இந்தச் சலுகைகளை வைத்துக்கொண்டுதான் நாடு புத்தாண்டில் மீளும் என்று அமைச்சர் பந்துல கதையடித்திருக்கின்றார்.

இந்த அரசாங்கம் புத்தாண்டிலிருந்து வற்வரியை அதிகரிக்கின்றது. புதிதாகப் பொருள்களுக்கும் வரியை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. வரி வருவாய் ஊடாக அரசின் செலவினங்களை சமாளிக்க முயல்கின்றது. மக்கள் மத்தியில் மீண்டும் சுமையை அதிகரித்திருக்கின்றது. இப்படியிருக்கையில் நாடு புத்தாண்டில் மீளும் என்று எப்படி அமைச்சரவைப் பேச்சாளரால் சொல்ல முடிந்திருக்கின்றது?

இந்த நாடு உற்பத்திப் பொருளாதாரத்துக்கு திரும்பாத வரையில் மீண்டும் மீண்டும் கடன் வாங்கி அதன் சுமைகளை வரிகளாக மக்கள் மீதுதான் சுமத்திக் கொண்டேயிருக்கும். வாங்கிய கடன்களில் உற்பத்திப் பொருளாதாரத்துக்கான எந்தவொரு முன்னெடுப்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கூட, உற்பத்தித் துறைகளுக்காக ஒதுக்கீடு என்பது 5 சதவீதத்துக்கும் குறைவானதுதான். இப்படியிருக்கையில் நாடு மீட்சியடைவதற்கான வாய்ப்பு என்பது அரிதாகவே இருக்கின்றது. ஆட்சியாளர்கள் அடுத்த ஆண்டு தேர்தலை இலக்கு வைத்து கடன்களை வாங்கத் தொடங்கியிருக்கின்றார்கள். அதன் சுமையையும் இந்த நாட்டு மக்கள்தான் சுமக்கப்போகின்றார்கள்.




# வரி விதிப்புகள் மூலம் வதைக்கப்படும் மக்கள்

## ரணில் அரசாங்கத்தை விளாசுகின்றார் சஜித்

**கொழும்பு, டிசெ. 15**

**மக்களை மரணப்படுக்கைக்குத் தள்ளி நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாத்துவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வரி விதிப்புகள் மூலம் மக்களைத் துன்பத்துக்குள் தள்ளியுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

'வற்வரி மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதீதமாக அதிகரித்தமையாலேயே சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் கட்டத் தொகை கிடைக்கப்பெற்றுள்ளது. நான் ஆட்சியைப் பொறுப்பேற்கவில்லை எனக் கூறப்பட்டது. நாட்டை வங்குரோத்து அடையச்செய்த தரப்புடன் எப்படி ஆட்சி அமைப்பது? எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதற்கும் அஞ்சாமல் தொங்கு பாலத்தில் இருந்து ராஜபக்ச குடும்பத்தை மீட்டு, தற்போது கேக் ஊட்டி விடுகின்றார். நாட்டின் 220 இலட்சம் மக்களை ஜனாதிபதி மறந்துவிட்டாலும், நாட்டு மக்களை மறக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாரில்லை - என்றார். (ம-44)



# மதஅவமதிப்பு தேரர் கைது!

கொழும்பு, டிசெ. 15

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட தேரர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கலகெடிஹேன பிரதேசத்தில் இரத்தினபுரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய தேரரே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# மத நிந்தனைகளை விசாரிக்கத் தனிப்பிரிவு

கொழும்பு, டிசெ. 15

சமூக வலைத்தளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மத அவதூறு தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காகத் தனிப் பிரிவு கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவால் நிறுவப்படவுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, பொதுமக்கள் 011 230 0637 என்ற இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளைப் பதிவுசெய்யலாம். அத்துடன் ccid.religious@police.gov.lk ஊடாகவும் முறைப்பாடு அளிக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# வரும் வருடம் கடும் வறட்சி உணவுப் பாதுகாப்புப் பாதிப்பு

## நிபுணர்கள் எச்சரிக்கை

நாட்டில் 2024ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு இடையில் கடுமையான வறட்சி ஏற்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

காலநிலை மாற்றம் மற்றும் இலங்கையின் உணவுப் பாதுகாப்பில் அதன் தாக்கம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உயர்மட்ட விஞ்ஞான அமர்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் மக்கள் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

சுமார் மூன்றில் ஒரு பங்கு குடும்பங்களுக்கு உணவுப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் உணவுப் பொருள்களின் விலை உயர்வால் நுண்ணூட்டச் சத்து இடைவெளி அதிகரித்து வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

16.12.2023

சனிக்கிழமை

கார்த்திகை - 30

சதுர்த்தி விரதம்

சுபநேரம் : 03.22 - 04.52

ராகுகாலம் : 09.22 - 10.52

## நாளொரு நல்வார்த்தை

வாத்து மீதான விசாரணைக்கு நரி நீதிபதியாக இருக்கக்கூடாது..

– தாமஸ் புல்லர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள்களால் நாளொன்றில் 40 சாவு!

கொழும்பு, டிசெ. 15

**நாட்டில் புகைத்தல் மற்றும் மதுப் பாவனை காரணமாக நாளாந்தம் 40 பேர் உயிரிழக்கின்றனர் என்று மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் நிலையத்தின் பணிப்பாளர் சம்பத் டி சேரம் மேலும் தெரிவித்ததாவது:-

மதுபான நிலையங்களைத் திறக்கும் காலம் அதிகரிப்பதன் ஊடாக விபத்து மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிக்கும் வாய்ப்புகள் உருவாகியுள்ளன. சுற்றுலாத்துறை வருமானத்தை ஈட்ட இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசாங்கம் தெரிவித்தாலும், மறைமுக விளம்பர நோக்கமே காணப்படுகிறது. கடந்த 2022ஆம் ஆண்டு அரசாங்கத்துக்குக் கிடைக்கப்பெற்ற மதுவரித் தொகை 165.2 பில்லியன் ரூபாவாகும் - என்றார். (ச-இ)



## ஆலோசகராக சனத் ஜயசூரிய

கொழும்பு, டிசெ. 15

இலங்கைக் கிரிக்கெட்டின் ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் வீரரும் தலைவருமான சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, இலங்கைக் கிரிக்கெட் உயர் செயற்றிறன் மையத்தின் கீழுள்ள அனைத்து அணிகளையும் கண்காணித்தல் மற்றும் பொறுப்புக்கூறல் அவரின் கடமை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## எரிவாயு விலையும் உயரும்

கொழும்பு, டிசெ.15

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

வற்வரி அதிகரிக்கப்பட்ட பின்னர் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை கணிசமாக அதிகரிக்கும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கட்டுமானப் பணியாளருக்கு கூடுதலான காப்புறுதிகள்!

கொழும்பு, டிசெ. 15

கடினமான தொழிலை மேற்கொள்ளும் கட்டுமானப் பணியாளர்கள் பணியின்போது எதிர்நோக்கும் விபத்தால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு உதவும் வகையில் காப்புறுதி வசதி மற்றும் இழப்பீட்டு நிவாரணம் வழங்கும் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இந்த விடயத்தை ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார்.

தொழில் கண்ணியத்துக்கும் தொழில் நீதியிலான தரநிலைகளுக்குமான விடயங்களைப் புதிய தொழில் சட்டத்தில் தனிப்பிரிவாக உள்ளடக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தொழிலின்போது எதிர்நோக்கும் விபத்து மற்றும் உங்களது ஓய்வுக்காலத்துக்கான நன்மைகளுக்கு இந்தப் புதியமுறை வழிசெய்யும். மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இதனைச் சட்டமாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## இரத்தினக்கற்கள் ஏற்றுமதி உயர்வு

கொழும்பு, டிசெ. 15

இரத்தினக்கல் ஏற்றுமதியில் வெற்றிகரமான வளர்ச்சி காணப்படுகிறது என்று தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருட இரத்தினக்கல் ஏற்றுமதி வருமானம் 16.05 வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஏற்றுமதி வருமானத்தை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஏற்றுமதி சேவைகள் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் தென்னக்கோன் தெரிவித்தார். (ச-இ)

## பாவனைக்கு ஒவ்வாத பெ. வெங்காயம் மீட்பு!

சந்தைக்கு விநியோகிக்கப்படவிருந்த மனிதப் பாவனைக்கு உதவாத ஒருதொகை பெரிய வெங்காயம் மீட்கப்பட்டுள்ளது.

லியனகேமுல்ல பகுதியிலுள்ள சேமிப்பு நிலையமொன்றில் வைத்தே குறித்த வெங்காயத் தொகை மூன்று கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது. இதன்போது 20 கிலோகிராமுக்கு அதிக நிறையுடைய பெரிய வெங்காயம் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை - சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் கிலோ 450 ரூபாவரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-இ)

## சலுகை விலையில் பயிற்சிப் புத்தகம்!

கொழும்பு, டிசெ. 15

பாடசாலை மாணவர்களுக்குச் சலுகை விலையில் பயிற்சிப் புத்தகங்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சலுகை அரசாங்க அச்சகத் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் தொடர்பான விவரங்களைப் பாடசாலை அதிபர்கள் வழங்கி புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்துள்ள டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், யப்னா யாழ் ஒரியன்ற் லயன்ஸ் கழகமும், நல்லூர் கிங்டொம் லயன்ஸ் கழகமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவர்களுக்கு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவானுஜன் மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார். நிகழ்வில் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



## வற்வரி எதிரொலி
## திறன்பேசிகளின் விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 15

நாடாளுமன்றத்தில் பெறுமதி சேர் வரி நிறைவேற்றப்பட்டதன் மூலம், ஜனவரி மாதம் முதல் தொலைபேசிகளின் விலை உயரும் வாய்ப்புள்ளது என்று தொலைபேசி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

வற் அதிகரிப்புடன் தொலைபேசி விலை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது. 18 வீத வரி சேர்க்கப்படும்போது, அதற்கேற்ப தொலைபேசிகளின் விலையும் அடுத்த ஆண்டு முதல் மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உயர்வடைகின்றன பஸ் கட்டணங்கள்

கொழும்பு, டிசெ. 15

எதிர்வரும் ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படும் வற்வரி அதிகரிப்புக்கு அமைவாக பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப் படவுள்ளன என்று பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்தவரும் ஜனவரிமாதம் முதல் ஒரு பஸ்ஸுக்கு சராசரியாக ஒரு கோடியே 57 இலட்சம் ரூபா செலவாகும். வற்வரிக்கமைய பஸ் உதிரிப்பாகங்கள், எரிபொருள் விலைகள், சேவைக் கட்டணங்கள் அனைத்தும் அதிகரிக்கின்றன. அதற்கமைய ஜனவரி மாதம் முதல் பேருந்துக் கட்டணங்களையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## ஓட்டோக் கட்டணம் விரைவில் உயர்வு!

கொழும்பு, டிசெ. 15

முச்சக்கரவண்டிக் கட்டணம் எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கப்படும் என்று இலங்கை முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவிக்கையில்,

எதிர்வரும் வருடத்திலிருந்து பெறுமதி சேர்வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளதால் எரிபொருளுக்கும் வரி விதிக்கப்படும். இதனால் பெற்றோல், டீசல் விலை சடுதியாக அதிகரிக்கும். அதற்கமையவே தற்போது ஒரு கிலோமீற்றருக்கு 100 ரூபாவாக அறவிடப்படும் முச்சக்கரவண்டிக் கட்டணம் இனி 150 ரூபாவுக்கு மேல் அதிகரிக்கப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை இராமாவிலில் கட்டடத் தொகுதியில் தீ

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் - மீசாலை இராமாவில் பகுதியில் கடைக் கட்டடத் தொகுதியொன்று தீ விபத்துக்குள்ளாகி யுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10:45 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கடையில் ஏற்பட்ட மின் ஒழுக்கே தீ விபத்துக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-20)



## கண்ணீர் அஞ்சலி

யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பிரதி
**அதிபர் க. செந்தில்வடிவேல்**
அவர்களின் தாயார்
**கணேசு ஈஸ்வரி**
அவர்கள் கடந்த (13.12.2023) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார், அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிச் சமூகம்**

THE ROYAL COLLEGE OF JAFFNA
O/L, A/L மாணவர்களுக்கான வகுப்புகள்
ஆரம்பமாகவுள்ளன
வணிகம், கணக்கீடு - கிருத்திகா
I.C.T - செல்வரதன்
குபேரன் கட்டடம், பிரான்பற்று வீதி, சங்கானை
Tel : 077 675 1649


## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 12 . 1930



மறைவு 14 . 12 . 2023

### தம்பையா அருள்நேசன் தம்பித்துரை

(சமாதான நீதவான்)

(யாழ். மத்திய பஸ்நிலைய ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறங்காவலர், உரிமையாளர், வெஸ்லிசினிமா ஆனைக்கோட்டை, வெஸ்லி கொம்மியூனிக்கேசன் யாழ்ப்பாணம், முன்னாள் உரிமையாளர், கோல்டன் ரவல்ஸ் முன்னாள் வாடகைக் கார் சங்கத் தலைவர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 693. ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா அருள்நேசன் தம்பித்துரை நேற்று (14.12.2023) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜாங்கரசு ஆசானம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இராசையா, யோகம்மா (தில்லையம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான யோசேப், அருளப்பு, மனுவல்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், லக்ஸ்மன் யூட் அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**693, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs53185) (CS) N-1


## கிருஷ்ணா அடைவு கடை

பதிவு இல. J / DS / BR / 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2023** ஆம் ஆண்டு **31.03.2023** இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் **2024** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **15** ஆம் திகதி **(15.01.2024)** இற்கு முன்னர் மீட்க்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்க தவறின் **15.01.2024** ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு: 2023 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

**இல. 370, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்**

**021 490 0311**
**021 222 5180**
**077 080 4656**

**உரிமையாளர்**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(cs.27366) (N.1)


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் ஸ்ரீ ரவீந்திரன்

**(Auditor - Supply and Logistics Services)**



மலர்வு 14.08.1965

உதிர்வு 14.12.2023

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு - தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தர்மலிங்கம் ஸ்ரீ ரவீந்திரன் அவர்கள் நேற்று (14.12.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் தங்கம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், ஆறுமுகம் தர்மாம்பாள் தம்பதியினரின் மருமகனும், திருமதி பூமகள் ஸ்ரீ ரவீந்திரனின் (ஆசிரியை - ST.Mary TMV Col - 04) அன்புக் கணவரும், அபிராமி (A/L 2023 Saiva Mangaiyar Vidyalayam), அங்கஜன் (A/L 2025 Hindu College Colombo - 04) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன், சரோஜா, ஸ்ரீஸ்கந்தா, ஸ்ரீ பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (16.12.2023) சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு, (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 10.00 மணிவரை சமயக் கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் :குடும்பத்தினர்**
**077 373 2310, 077 767 7123**

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ.து)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்
## 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை

மேற்படி எமது சங்கத்தின் பதினொரு **(11)** கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான பொதுச்சபைக் கூட்டம் **17.12.2023** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு பின்வரும் இடங்களில் நடாத்துவதற்கு சங்கத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த கிளைகளின் தகுதியுடைய அங்கத்தவர்களக்கு தவிசாளரால் தனித்தனியாக கூட்ட அழைப்பு கடிதம் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாத தகுதியுடைய அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்.**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 109 | சித்தியம்புளியடி | கலைச்செல்வி சனசமூக நிலையம் | திரு.ச.பிறேமிலன் |
| 02 | 110 | அம்பட்டாவத்தை | ஐக்கியவாலிபர் சனசமூக நிலையம் | திரு.ச.விஜயானந்தா |
| 03 | 111 | சாத்தனாவத்தை | திருவள்ளுவர் சனசமூக நிலையம் | திரு.ம.நிசாந்தன் |
| 04 | 112 | அட்டமட்டை | முருகானந்தா சனசமூக நிலையம் | திரு.த.கண்ணதாசன் |
| 05 | 113 | வலித்தூண்டல் | சிவானந்தா சனசமூக நிலையம் | திரு.செ.பகீரதன் |
| 06 | 114 | சேந்தாங்குளம் | பாரதி சனசமூக நிலையம் | திரு.இ.வேல்குமார் |
| 07 | 118 | மாவை கலட்டி | காந்திஜி சனசமூக நிலையம் | திரு.ப.தவப்பிரியன் |
| 08 | 119 | வறுத்தலைவிளான் | இந்து இளைஞர் சனசமூக நிலையம் | திரு.க.வக்ஷன் |
| 09 | 120 | மயிலிட்டி | தலைமைக்காரியாலயம் | திரு.பா.பாலரவி |
| 10 | 122 | குரும்பசிட்டி | தலைமைக்காரியாலயம் | திரு.சி.சியாந்தன் |
| 11 | 126 | ஆவளை | தலைமைக்காரியாலயம் | திரு.இ.தனுசன் |

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**அலுவலகம்,**
**857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**ஒப்பம்**
**திரு.கி.சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 07 . 1957



மறைவு 14 . 12 . 2023

### செல்வரட்ணம் - பரமேஸ்வரி
(கண்டக்கா)

உத்திராவத்தை, புலோலி வடகிழக்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் - பரமேஸ்வரி (கண்டக்கா) அவர்கள் நேற்று (14.12.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - செல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா அன்னம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா - செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், செல்வி, கடுங்கோ, இறைவன், நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிள்ளிவளவன், அஜிதா, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தவமணி, சிவஞ்ஞானசுந்தரம் (அமரர்), சிவபாதசுந்தரம், சுப்பிரமணியம், சிறிஸ்கந்தராசா, சிவநேசன் (அமரர்), சிவறாஜன், சிவறாஜா (அமரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சப்தஸ்வனா, கபிலன், அபிஷன், சந்தியா, நிதுலன், நிலானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2023) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு - நந்தினி - 077 288 0037

**தகவல்:**
**குடும்பத்தினர்**

CS (26614) F-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.

## பொது அறிவித்தல் - 2024

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொது மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2024**

சபை எல்லைக்குள் சகல வியாபார தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுபவர்கள் 2024 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2024.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2024**

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**3) கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல், திருத்துதல் கட்டணங்கள் அறவிடல் - 2024**

i) கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், கிணறுகள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், கட்டிடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் முன் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடின்றி அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**4) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் - 2024**

2024 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2024.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும், வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள்/ நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**6) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென சபையால் ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும்.

**7) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**

கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1.5Km தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி என்பன விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**8) படவரைஞரைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2024**

2024 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2023.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவோ அல்லது புதுப்பித்துக்கொள்ளவோ முடியும். தவறின் குறிப்பிட்ட திகதியின் பின்னர் பதிவினை மேற்கொள்ள முடியாது. மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**9) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி கழிவுகள் அகற்ற ஒத்துழைப்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**10) பொது சுகாதாரம் பேணல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11) இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும்.**

இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா 1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை **அலுவலக வேலை நாட்களில்** காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை உரிய உப அலுவலகத்திலும் சனி,ஞாயிறு மற்றும் **பொது விடுமுறை தினங்களில்** உரிய உப அலுவலகத்துக்குரிய பொது நூலகத்திலும் பணமாக செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக மேற்குறித்த இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**12) வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக**

சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

**13) கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது**

சபை எல்லைக்குள், வீதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரிமை கோரும் பட்சத்தில் தண்டம் மற்றும் பராமரிப்புச் செலவுடன் மீள வழங்கப்படுவதுடன், உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகள்**

**1) குடிநீர் வழங்கல் சேவை**

எமது பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் ஒரு லீற்றர் ரூபா 1.ரூபா 1.50 என்ற கட்டண அடிப்படையில் பிரதேச சபையின் அந்தந்த பிரிவு உப அலுவலகங்களில் செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**2) கனரக வாகன சேவைகள்**

பக்கோ, கலிபௌசர், போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பணமாக செலுத்தி வாகன சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கா.சண்முகதாசன்,**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.**

**15.12.2023.**

---

# பெயர்மாற்றம்

பாரதி, ஊரெழு மேற்கு உரெழுவில் வசிக்கும் **கிட்டிணன் சசீகரன்** ஆகிய நான் எனது பெயரை **கிட்டிணன் சசிதரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கிட்டிணன் சசிதரன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs.27364) (N.1)

**கிட்டிணன் சசிதரன்**

---

# முதலாம் ஆண்டு நன்றி நினைவு ஆராதனை

தோற்றம் 16 . 04 . 1958



மறைவு 16 . 12 . 2022

கடந்த (16.12.2022) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புத் தந்தையார்

## நெல்சன் யோசப் (ஜெயம்)

### (ஜெயம் கூல் பார் முதலாளி)


அவர்களின் முதலாம் ஆண்டு நன்றி நினைவு ஆராதனை திவ்ய மஹால் மண்டபத்தில் (கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்) 16.12.2023 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடத்த தீர்மானித்துள்ளோம். எமது தந்தையாரின் இழப்பின் நிமித்தமான துயரில் பங்குகொண்ட உங்களை தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியாமையினையிட்டு மனம் வருந்துகிறோம். இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அனைவரும் இந்தநிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**077 977 1959** (CS 52875) AK.1 **குடும்பத்தினர்**

---

# மரண அறிவித்தல்

மலர்வு 13 . 11 . 1938



உதிர்வு 12 . 12 . 2023

## தம்பிமுத்து நாகலிங்கம்

**(ஓய்வுபெற்ற சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க முகாமையாளர்)**

மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து நாகலிங்கம் அவர்கள் கடந்த (12.12.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்தபுதல்வனும், காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை கனகம்மா தம்பதிகளின் மருமகனும் மனோன்மணியின் (சறோஜினி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, விசுவலிங்கம், நாகம்மா, சண்முகலிங்கம் மற்றும் அன்னம்மா, செல்லம்மா, தர்மலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான திரவியம், சின்னத்துரை, சரஸ்வதி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ். வீதி,**
**கோண்டாவில்.**

தகவல்: குடும்பத்தினர்
**021 221 6978**
**077 378 5620**

(CS 53187) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணாம்குளத்தின் வடிகாலைச் சீர்செய்க

## குடியிருப்பாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 15
கட்டப்பிராயிலுள்ள சிறிய கொள்ளளவு கொண்ட வண்ணாம்குளத்தில் வெள்ளநீர் அதிகளவில் தேங்குவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
சிறிய கொள்ளளவு கொண்ட வண்ணாம்குளத்தில் அதிகளவு தேங்கும் மழைவெள்ளநீரால் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் அசௌகரியங்களுககு உள்ளாகின்றனர்.
குளத்தோடு இணைந்திருக்கும் மதகினூடாக வெள்ள நீர் வடிந்தோட இருந்த பழைய வழிமுறைகள் தடைப்பட்டுள்ளன.
இதுதொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையிடம் தெரிவித்தும் இதுவரை சரியான திட்டமிடல்களோடு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி புதிய வடிகாலமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச)





## சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், டிசெ. 15
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு ஆரம்பப்பிரிவுப் பாடசாலை முன்றிலில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.
நிகழ்வில் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த காய்கறிகள், தேங்காய்கள், இலைவகைகள், பழங்கள், கைப்பணிப் பொருட்கள், தின் பண்டங்கள் மற்றும் பனை சார்ந்த உற்பத்திகளை மாணவர்கள் காட்சிப்படுத்தி விற்பனை செய்தனர். (ரி-66)



சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் வரணி மத்திய கலாசார மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க. சந்திரகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ம-159)

### சபரீச ஐயப்பன் தேர்த்திருவிழா

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. (ரி-66)





கிளிநொச்சி, வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா அண்மையில் இடம்பெற்றது. (ச-13)

## அமரா நாட்டிய நாடகம்

யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் நடனக் கலைஞர்கள் வழங்கும் இந்திய இதிகாச சிற்பங்களின் சிறப்பினைச் சித்திரிக்கும் அமரா நாட்டிய நாடகம் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. (ரி-66)



# தேசியத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு!



யாழ்ப்பாணம், டிசெ.15
தேசிய ரீதியில் நடைபெற்ற தேயிலைக் கொழுந்து மலையக நடனத்தில் முதலிடம் பெற்ற வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
கல்லூரியின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி சுபத்திரா கந்தகுமார் பங்கேற்றார்.
இதன்போது குறித்த நடனத்தை பயிற்றுவித்த நடன ஆசிரியர் திருமதி சகிலா சுதாகரன், சங்கீத ஆசிரியர் திருமதி நித்தியா தவக்குமார் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் அழகையா துரைராசா
அவர்களின்
29ஆம் ஆண்டு நினைவுதின வைபவம்-2023



காலம் : 15.12.2023 வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப.10.30 மணி
இடம் : யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பேராசிரியர் அ.துரைராசா நினைவு மண்டபம்.
தலைவர் : பேராசிரியர் சி.சிறிசற்குணராசா (துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நினைவுப் பேருரை வழங்குநர்: கலாநிதி ஆனந்தமயில் நித்திலவர்ணன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கல்லூரியின் பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
077 1710 294
(CR 41311) A-1



வவுனியா
கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்
வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அழைப்பு
2023

மேற்படி சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 06.01.2024 சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபை கேட்போர் கூடத்தில் (சம்பத் வங்கிக்கு பின்) நடைபெறும். மேற்படி கூட்டத்தில் பணிப்பாளர் தெரிவு இடம்பெற உள்ளதால் சங்க அங்கத்தவர்கள் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:
அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி கூட்டத்திற்கு சமுகமளிக்கவும். அங்கத்தவர் பட்டியல் சங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தொ.பே.இல:024 222 3367 -செயலாளர்-
(CR 41313) A-1



மரண அறிவித்தல்

| தோற்றம் | இறப்பு |
|---|---|
| 01 | 14 |
| 04 | 12 |
| 1946 | 2023 |



சந்திரசேகரம் காந்திமதி

புளியங்கூடலைப் பிறப்பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் காந்திமதி நேற்று (14.12.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும், சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும், கஜீபன், கஜந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவா, சுயனி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாயீசன், கரிஸ்சாய், டிவன்ஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அருளம்பலம், நவரட்ணம், அன்ன பூரணம் மற்றும் சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், காந்தமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இந்திரன், கிருபன், மாலா, மோகன், நந்தா மற்றும் றூபன், றூபினி, கலா, தம்பி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2023) வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: 077 8822 741
(CS 27372) A-1


# மருதடியில் ரம்பா!

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள, தென்னிந்திய பிரபல பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவதற்காக பிரபல நடிகை ரம்பா இலங்கைக்கு வந்துள்ளார்.

அவர், யாழ்ப்பாணம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நேற்று வழிபாடுகளை மேற்கொண்டார். (ம-27)



அத்துமீறிய மீன்பிடி

# தமிழக மீனவர்கள் 6 பேர் மறியலில்!

காரைநகர் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆறு மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் 28ஆம் திகதிவரை அவ விளக்கமறியலில் வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். (ம-100)


மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 13 |
| 11 | 12 |
| 1942 | 2023 |



அமரர்
சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (துரை)
இளைப்பாறிய இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர் (CEB)

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு.சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 13.12.2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான அமரசிங்கம் இராசலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், இந்திரபூபதி (இந்திராணி) அவர்களின் அன்பு கணவரும், கார்த்திகா, காயத்திரியின் பாசமிகு தந்தையும், விஜயராஜன் அவர்களின் பாசமிகு மாமனாரும், நிருஜன், அனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர்.செல்வராணி, லோகதாசன், அமரர்.புஸ்பராணி, சிவதாசன், தில்லைநாதன், கருணாகரன், கருணாதேவி, யோகநாதன், ஜெயந்திராணி ஆகியோரின் அன்பு சகோதரனும், இராஜபூபதி, அமரர்.சுந்தரராஜா, அமரர்.சிவநேசன், அமரர்.சிவலிங்கம், இரட்ணபூபதி, விமலா, ஜெயலிங்கம், விஜயலிங்கம், கல்யாணி, சாந்தி, திலகா, ரவிராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.12.2023 சனிக்கிழமை அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 12.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு. பிற்பகல் 1.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விஜயராஜன் - 0740488374, WhatsApp +61419243233
காயத்ரி - 0779976455, WhatsApp +61422316584
கார்த்திகா - 0754696739,


## மாணவர்கள் கௌரவிப்பு!

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

பழைய மாணவன் அமரர் பரா.வசந்தகுமார் ஞாபகார்த்தமாக இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பழைய மாணவர் சங்கச் செயலாளர் பரா. சாந்தகுமார் முதன்மை விருந்தினராக் கலந்து கொண்டார்.(ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் மீதான வாள்வெட்டு கண்டித்து கண்டன ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் மீது கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தைக் கண்டித்து பாடசாலைச் சமூகத்தினரால் நேற்றுக் கண்டன ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'கல்விச் சமூகத்தைச் சீரழிக்காதே', 'சமூக அமைப்புகளே இன்னும் ஏன் மௌனம்?' 'கத்தியைக் காட்டி கல்வியை அழிக்காதே', 'அதிபர், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்து' உள்ளிட்ட வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச)




## பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 15

அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகக் கூறப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு உடனடியாக போதிய பாதுகாப்பை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (அ-ஒ-இ)

### டெங்கின்...

மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், மாவட்டச் செயலர்கள், சுகாதாரப் பணிமனைகளின் அதிகாரிகள் உள்ளிட்டோர் நேரடியாகவும், சூம் ஊடாகவும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மிகக் குறைவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், எனினும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் காணப்படுவதாகவும் அந்தந்த மாவட்டங்களின் மாவட்டச் செயலர்களும், சுகாதாரத்துறைசார் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பிலும், டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரத்துறையினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் அதிகாரிகளால் ஆளுநருக்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

வடிகால்களின் துப்பரவு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும், கைவிடப்பட்ட மற்றும் பராமரிப்பற்ற காணிகளில் நுளம்பு பெருகுவதைத் தடுக்கவேண்டும் எனவும் ஆளுநர் கூறினார். பராமரிப்பற்ற காணிகள் தொடர்பில், காணி உரிமையாளர்களுக்கு எதிராக விரைவான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளுக்காகப் பொலிஸ், முப்படைகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பிளாஸ்ரிக் பொருள்களை மாணவர்கள் வகுப்புகளுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கவேண்டும் எனவும், தினமும் காலை கூட்டத்தின் போது டெங்கு ஒழிப்புத் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும் எனவும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார். அத்துடன், மாகாணத்திலுள்ள அனைத்து அரச திணைக்களங்களிலும் வாராந்தம் துப்பரவுப் பணிகளை மேற்கொள்ளத் திணைக்களத் தலைவர்கள் அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என இதன்போது மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். பொலிஸ் நிலையங்களில் காணப்படும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளில் அறிவித்தல்களை வழங்கமுடியும் எனவும் அவர் கூறினார். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கிராமிய மட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தமுடியும் என மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அதற்கமைய, வாராந்த கிராமிய மட்ட கலந்துரையாடல்கள் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும், டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைகளை வழங்கும் வகையில் அரச மருத்துவமனைகளை மேம்படுத்துமாறும் ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் வடக்கு மாகாணத்துக்குள் காணப்படும் தனியார் மருத்துவமனைகளில் கடமைபுரியும் மருத்துவர்களும், டெங்குக் காய்ச்சல் தொடர்பில் சமூக அக்கறையுடன் செயற்படவேண்டும் எனவும், உரிய மருத்துவர்களுக்கு இது தொடர்பில் ஆலோசனை வழங்குமாறும் மாகாண சுகாதாரச் சேவைப் பணிப்பாளருக்கு, ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (அ-ஒ-27)

### 200 திட்டங்கள்...

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வற்வரி விதிப்பு பணவீக்கத்தில் 2 சதவீதத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மறுமுனையில் வரி செலுத்துவோர், செலுத்தாமல் இருப்போர் தொடர்பில் கவனம் செலுத்தி வரி வலையமைப்பை விரிவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

ஆயினும் கடன் மறுசீரமைப்புக்குப் பின்னர் கடந்தகாலத்தில் இடைநிறுத்தப்பட்ட பல திட்டங்களை 2024ஆம் ஆண்டில் மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். அதேபோல் 2021ஆம் ஆண்டு இறுதி முதல் 2023 இறுதிக் காலாண்டு வரையில் மறைப் பெறுமானத்தில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியை 2024 ஆம் ஆண்டி நேர்ப் பெறுமானத்துக்குக் கொண்டுச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

சர்வதேச நாணயநிதியத்தால் எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. மாறாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வழிகாட்டல் வரைவையே மேற்படி நிதியம் வழங்கியுள்ளது - என்றார். (அ-ஒ-44)

### காற்றுச்...

'காற்றுச் சுழற்சியின் நகர்வு, வடக்கு வடமேற்கு நோக்கி இருப்பதால் தொடர்ச்சியான கனமழை கிடைப்பதோடு கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை - தொடர்ச்சியாக மழைக்கான வாய்ப்புள்ளதால் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். இந்தக் காற்றுச் சுழற்சியால் நேற்றைய தினம் காலை 6 மணியிலிருந்து இரவு 7 மணி வரையிலான காலப் பகுதியில் முல்லைத்தீவில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது. காற்றுச்சுழற்சியின் காரணமாக நிலவும் குளிரான காலநிலை தொடரும்' - என்றார். (அ-ஒ-5-66)

### மாணவியைத்...

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் மாணவி தாக்கப்பட்ட நிலையில் ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு ஆசிரியர் அழுத்தம் வழங்கியதாவும், வேறு வழிகளில் தனக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் அதன் காரணமாக தான் தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முயன்றதாகவும் மாணவி வாக்கு மூலம் வழங்கியுள்ளார். அதனடிப்படையில் குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-110)

### விலை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம், மற்ற அனைத்து விடயங்களை விடவும் நாட்டில் அரசாங்கத்தின் வருமானத்தை முக்கியமாகக் கருதுகின்றோம். வற்வரி அதிகரிப்பின் மூலம் பொருள்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆயினும், நுகர்வுப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி வற்வரி அதிகரிப்பை மேற்கொள்ளும் செயன்முறை சாத்தியம் என நாம் நம்புகின்றோம் - என்றார். (அ-ஒ-இ)

### மக்களே...

இது தொடர்பில் நேற்று முன்னிரவு வெளியிட்ட அறிக்கையில்;

இரணைமடுக் குளத்துக்கான நீர்வரத்து அதிகமாக இருப்பதனால், இன்று (நேற்று) இரவு தொடர்ச்சியாக மழை பெய்யுமானால் குளத்தின் வான் கதவுகள் பாதுகாப்புக் கருதி சிறியளவில் திறக்கப்படும். இதனால் பெரும் இடர்கள் எதுவும் ஏற்படாது. இருந்தபோதிலும் குளத்தின் கீழ்ப் பகுதியில் இருக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

### மூழ்கியது...

போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் ரயில் நிலையம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசனக் குளமான தண்ணிமுறிப்புக்குளம் வான் பாயத் தொடங்கியுள்ளது. மாவட்டத்தில் பல குளங்கள் அண்மையில் மறுசீரமைக்கப்பட்டதன் காரணமாக அவை உடைப்பெடுக்கும் அபாயம் இருப்பதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-ஒ-5-19)

### திடீரென...

வீழ்ந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசபந்து தென்னக்கோனை நட்டஈடு செலுத்த உத்தரவு

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளை, அவர்களால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நட்டஈடு வழங்க உயர்நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை மீறியதற்காக அவர்களின் தனிப்பட்ட நிதியிலிருந்து 2 மில்லியன் ரூபாவை நட்டஈடு செலுத்த உத்தரவிட்டுள்ளது. மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பான விசாரணையின்போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மனுதாரரான டபிள்யூ. ரஞ்சித் சுமங்கல என்பவரைச் சட்டவிரோதமாகக் கைதுசெய்து, தடுத்து வைத்து, சித்திரவதைக்கு உட்படுத்தியதன் மூலம், தேசபந்து தென்னக்கோனின் மேற்பார்வையின் கீழிருந்த மிரிஹான பொலிஸ் நிலையத்தில் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேசபந்து தென்னக்கோன் உட்பட அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

# நினைவுப் பேருரையும் கருத்தாடல் அரங்கும்

தேசத்தின் குரல் அரசறிவியல் பள்ளி நடத்தும் 'வணங்குவோம் வல்லமை சேர்ப்போம்' எனும் தொனிப்பொருளிலான நினைவுப் பேருரையும் கருத்தாடல் அரங்கும் கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தி ஆர்.எஸ். கிறீன் பாரதி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளைத் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையுரையையும், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ்.ரகுராம் தொடக்கவுரையையும், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் நினைவுப்பேருரையையும், சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன், அரசியல் ஆய்வாளர் மற்றும் எழுத்தாளர் குணா கவியழகன் கருத்துரைகளையும் ஆற்றவுள்ளனர். (ரி)

## அராலி – பொன்னாலை வரை

# கடற்கரையோரச் சுவீகரிப்பு உடன் கைவிடல் வேண்டும்

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற் கரையோரப் பிரதேசத்தைச் சுவீகரிப்பதற்கு வன உயிரிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சிகளை கைவிட வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரும் இலங் கைத் தொழிலாளர் சமூகங்களின் கட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பகுதியை நம்பி நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொழில்புரியும் நிலையில் அதனைக் குழப்பும் விதத்தில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் அப்பகுதியில் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டமையை, அரசாங்கம் திட்டமிட்டு காணிகளையும் இடங்களையும் அபகரிக்கின்ற செயற்பாடுகளாகவே பார்க்கின்றோம். அரசாங்கம் குறித்த கபளீகர முயற்சியைக் கைவிடவேண்டும் -என்றார். (ம-20)

# க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகள்

### யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம்

ம.கோபிராஜ் 7ஏ பி எஸ், யோ.ஜதுசன் 7ஏ பி எஸ், ச.அஸ்வின் 5ஏ 3பி சி, ச.சந்தியா 4ஏ 3சி, ரா.பிரியங்கா 3ஏ பி 2சி 3எஸ், ச.கவிஸ்னா 3ஏ 2பி 2சி 2எஸ், ஜ.சுகிர்தன் 2ஏ பி 5சி எஸ், த.டிசாளன் 2ஏ 2பி சி 2எஸ், மோ.விதுர்சா ஏ 6பி 2சி, ச.ஹரினி ஏ பி சி 5எஸ், ர.அஜந்தன் ஏ 2பி 4சி 2எஸ், சி.அஜிபன் 5சி 3எஸ், க.ஜதுசன் ஏ 4சி 2எஸ், ந.நதுசா பி சி 5எஸ், வ.சஜீவன் பி 2சி 3எஸ். (ரி)

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

**A/L வரலாறு**

எப்போதும் யாழின் முதன்மை ஆசிரியர்
**M.பத்மன்**
[B.A(Hons)History, P.G.D.E, Dip.in.Psy, M.A (Hons) History, M.E.D (OUSL)]

**A/L 2025 இற்கான அனுமதிகள் ஏற்கப்படுகின்றன**

கற்பிக்கும் இடங்கள்:-
High College குளப்பிட்டி | Bitsman மானிப்பாய்
DMI - ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- 077 482 5587

**மணமகன்கள் தேவை**

கனடாவில் வசிக்கும் 1990,1997 இல் பிறந்த மணமகள்களிற்கு மணமகன்கள் தேவை.

தொடர்பு: 075 910 6973

# மரண அறிவித்தல்

பிறப்பு
06
03
1971



இறப்பு
13
12
2023

## திருமதி றஜீபன் கலாராணி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கட்டுவன் தெற்கு முனியப்பர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கலட்டி வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஜீபன் கலாராணி கடந்த (13.12.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் மல்லிகாதேவி தம்பதியரின் அன்பு மகளும், செல்வநாயகம் ரஞ்சிதமலர் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற றஜீபன் அவர்களின் அன்பு மனைவியும், ஆதித்தன் (யா/இந்துக் கல்லூரி), ஓவியா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாமதி, பகீரதன், கலாநிதி, கலாயோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயவர்த்தனா, தர்சி, அசோக்குமார், கோகுலதாஸ், தீபனா, பிரதீபன், மதுரன், மகிந்தன், அரவிந்தன் ஆகியோரின் மைத்துனியும், சிவசங்கர், ஜெனனி, அபிராமி, நிலானி, சுகன்யா, சுஜீபா, சுகிர்தன், அனோஜா, வித்யா, சூர்யா ஆகியோரின் சிறிய தாயாரும், துவாரகா, பாரதி, பரணி, அபூர்வன், ஆரபி, அகரன் ஆகியோரின் பாசமிகு அத்தையும், சக்தி, சியாம், அருவியா, ஆதியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2023) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு.

(CS 27368) A-1

தகவல்:
குடும்பத்தினர்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 22 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* உரிய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ள முடியும்.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
076 755 8606

(CS 27307) A-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org